## நெல்லை மாவட்டம் அன்பாடும் முன்றில்

# 125 மாணவர் தலைமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சி!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு சிறப்பான பள்ளிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்!

நெல்லை, அக். 17 -

நெல்லை மாவட்டம் அன்பாடும் முன்றில் 125 வது மாணவர் தலைமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சியில் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாணவ மன்ற பொறுப்பாளர்களுக்கு பதவியேற்பு செய்து வைத்தும், சிறப்பான பள்ளிகளுக்கு சான்றிதழும் வழங்கினார்.

நெல்லை மாவட்டம், பாளையங் கோட்டை நேருஜி கலையரங்கில் நேற்று முன்தினம் (15.10.2024) நடைபெற்ற அன்பாடும் முன்றில் 125 வது மாணவர் தலைமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன் தலைமையில், நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப், நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத் தலைவர் விஜிலா சத்யானந்த் ஆகியோர் முன்னிலையில் மாணவ மன்ற பொறுப்பாளர்களுக்கு பதவியேற்பு செய்து வைத்து, அன்பாடும் முன்றில் குறும்படத்தினை வெளியிட்டு, சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசுகளும், சான்றிதழும் வழங்கி, நல்லாசிரியர் விருது பெற்றவர் களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டினர்.

இந்நிகழ்வில் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு மாணவர்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செல்படுத்தி வருவதோடு, அரசு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களிடையே நல்லுணர்வை ஏற்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மாணவர்கள் கல்வி பயில வேண்டுமென்பதற்காக அதிகளவில் பள்ளிகளை திறந்து, மதிய உணவு திட்டத்தினை கொண்டு வந்தார்கள். நம் முதலமைச்சர் அவர்கள் காலையிலும் மாணவர்கள் பசியுடன் கல்வி பயில கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் காலை உணவு திட்டத்தினை கொண்டு வந்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

உலகத்தரத்திலான கல்வித்தரத்தை கற்க வேண்டுமென்பதற்காக ஸ்மார்ட் வகுப்பறை கொண்டு வரப்பட்டு, அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களின் கல்வித்தரம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பள்ளி மாணவர்கள் உயர்கல்வி பயின்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக மாதம் ரூ.1000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களை கொண்டுவந்து, மாணவ, மாணவியர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. கல்லூரி படிப்பை முடித்து வேலைவாய்ப்பினை பெறும் வகையில் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு வேலை வாய்ப்பு முகாம் மூலம் நெல்லை மாவட்டத்தில் மட்டும் 5000,க்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே பட்டப்படிப்பு படித்த பெண்கள் 60 சதவீதம் பேர் தமிழ்நாட்டில் தான் உள்ளனர்.

இன்று மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் பிறந்த தினமான உலக மாணவர் தினத்தை முன்னிட்டு, இந்த ஆண்டிற்கான கருப்பொருளான “மாற்றத்தின் தூதுவர்களாக மாணவர்கள்” என்ற இலக்கில் “அன்பாடும் முன்றில்” 125வது மாணவர் தலைமைத்துவ மேம்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அன்பாடும் முன்றில் நெல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் மாணவக் கண்மணிகள் தங்களிடம் உள்ள வேற்றுமைகளை மறந்து அனைவரும் ஒற்றுமை மற்றும் அன்பு உணர்வோடு செயல்படும் வகையில் அன்பாடும் முன்றில் திட்டம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 2023 அக்டோபர் மாதம் 45 பள்ளிகளில் பரிசோதனை முயற்சியாக தொடங்கப்பட்டது. இந்த முயற்சி சிறப்பான பலன்களை அளித்ததை தொடர்ந்து, இந்தக் கல்வி ஆண்டில் இத்திட்டம் அனைத்து நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பள்ளிகளில் மாணவர்களிடையே எழும் பல்வேறு பிரச்சினைகளை கண்டறிந்து உடனுக்குடன் தீர்வு காண்பதும், சாதி, மதப் பாகுபாடு ஒழித்தல், குழந்தை திருமணம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இடைநிற்றலைத் தவிர்த்தல், இடைநின்ற மாணவர்களைப் பள்ளிகளில் சேர்த்து தொடர்ந்து கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்துதல், மதுபோதையினால் ஏற்படும் தீய விளைவுகள், வன்முறையற்ற மாணவர் சமுதாயம் உருவாக்குதல் போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அன்பாடும் முன்றில் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநிலம் முழுவதும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தியுள்ளார். இதன் மூலம் நெல்லை மாவட்டத்தில் இருந்து மட்டும் 3000 பேர் மாநில போட்டிகளில் வெற்றி பெற தகுதி பெற்றுள்ளனர். அவர்கள் மாநில அளவிலும் சாதனை படைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இன்றையதினம் சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்கும் எனது பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

முன்னதாக இத்திட்டம் குறித்து, மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன் தெரிவித்ததாவது மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் பிறந்த தினத்தை ஐநாசபை உலக மாணவர் தினமாக அறிவித்து, ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கொண்டாடும் விதமாக 125வது அன்பாடும் முன்றில் “மாற்றத்தின் தூதுவர்களாக மாணவர்கள்” கருப்பொருளாக ஐநா சபை அறிவித்திருக்கிறது. நம்முடைய மாவட்டத்தின் மாணவர்கள் நாளைய உலகத்தை நோக்கிய பயணத்தின் மாற்றத்தை எடுத்துச் செல்லக்கூடியவர்கள். நல்லதொரு மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறையின் மூலம் பல்வேறு அறிவுரைகளை வழங்கி, அதனடிப்படையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அக்டோபர் 2023 அன்பாடும் முன்றில் திட்டத்தினை 45 பள்ளிகளில் தொடங்கி வைத்தார்கள் இந்தக் கல்வி ஆண்டில் இத்திட்டம் 380 நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மையமாக இருக்கக்கூடியவர்கள் மாணவர்கள், மாணவர்களை தாங்கி பிடிக்கின்ற தூண்களாக இருக்கக்கூடியவர்கள் ஆசிரியர்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என மூன்று தரப்பினர்களை அன்பாடும் முன்றில் திட்டத்தின் கீழ் காவல்துறை, வருவாய்த்துறை, குழந்தைகள் பாதுகாப்பு அலகு, சமூக நலத்துறை, உள்ளாட்சித்துறை, போக்குவரத்துத் துறை என பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பல்வேறு குழுக்களாக பிரித்து அதாவது தாமிரபரணி, சேர்வலாறு, மணிமுத்தாறு, நம்பியாறு என நான்கு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, ஆசிரியர்களையும் பெற்றோர்களையும், மாணவர்களையும் பள்ளி வளர்ச்சி திட்டங்களில் பங்கேற்க செய்து, மாணவ, மாணவிகளின் பன்முக ஆற்றலை வளர்த்து. அவர்களின் திறமைகளை மிளிரச் செய்தல் ஆகிய பணிகள் அன்படும் முன்றில் திட்டத்தின் செயல்பாடாகும்.

அதன் தொடர்ச்சியாக, பசுமை மன்றம் ,உயர் கல்வி வழிகாட்டி மன்றம், போதை ஒழிப்பு மன்றம், சாலைப்பாதுகாப்பு மன்றம் என்றெல்லாம் ஒவ்வொரு குழுவிலும் மாணவர்கள் தலைவர்களாக செயல்பட்டு, பொறுப்புகள் வழங்கப் பட்டு, அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியர், பொறுப்பாசிரியர் வழிகாட்டுதலின் பேரில் பள்ளிகளில் சீரான முறையில் செயல்பட்டு வருகிறார்கள்.

மேலும், வித்யா விதை என்ற தன்னார்வ நிறுவனம் மற்றும் அமெரிக்கா கலிபோர்னியாவில் உள்ள டியூக் பல்கலைக்கழகம் ஆகியோரின் ஒத்துழைப்போடு நம்முடைய மாவட்டத்தில் அன்பாடும் முன்றில் திட்டம் கல்வி வளர்ச்சிக்கான பல்வேறு நடவடிக்கைகள் சிறப்பாக எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப. கார்த்திகேயன் தெரிவித்தார்.

முன்னதாக, அன்பாடும் முன்றில் திட்டத்தில் மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தின் பயன்களை பகிர்ந்து கொண்டார்கள். தொடர்ந்து, ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு இதழ்களில் சிறப்பான படைப்புகளை வழங்கிய 25 மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் 2025 புத்தக கண்காட்சியில் ரூ.1000 மதிப்பிலான புத்தகங்கள் வாங்குவதற்கான கூப்பன்களையும், கலந்து கொண்ட மாணவ, மாணவியர்களுக்கு பனை விதை கன்றுகளையும் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.


நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மா. சுகன்யா, மாநகர காவல் ஆணையர் அனிதா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சிவக்குமார், எழுத்தாளர் மற்றும் கதைச்சொல்லி சரிதா ஜோ, வட்டாட்சியர் செல்வம், மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்க கல்வி) சங்கீதா சின்னராணி, களக்காடு நகர்மன்ற துணைத் தலைவர் ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், எழுத்தாளர் நாறும்பூநாதன் உட்பட ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

**அக்டோபர் 17 (1993)**



‘தஞ்சை மாவட்ட பெரியார்’ என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது “பெரியார் விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, அக். 17 -

மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 19ம் தேதி காலை திருப்பாலை பெண்கள் கல்லூரி அருகே அமைந்துள்ள குறிஞ்சி திருமண மஹாலில் நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி கழகத்தினருக்கு தமது அறிக்கை மூலம் அழைப்பு விடுத்துள்ளார். அதன் விபரம்



நாடு போற்றும் நம் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டில் அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் புதிதாக பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு ள்ளனர்.

அது போன்று வடக்கு மாவட்டத்தில் உள்ள மதுரை கிழக்கு, மேலூர் மற்றும் சோழவந்தான் தொகுதிகளுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்க ப்பட்டுள்ளனர், அது தொடர்பாகவும், மழைக் காலங்களில் கழகத்தினர் ஆற்ற வேண்டிய மக்கள் பணி குறித்தும், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் உள்ளிட்ட பணிகளில் கழகத்தினர் ஈடுபடுவது குறித்தும் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 19.10.2024 சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருப்பாலை யாதவா மகளிர் கல்லூரி அருகில் உள்ள குறிஞ்சி திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

---

## வடகிழக்கு பருவ மழை!

# நெல்லை மாநகரம் - 4 பகுதிகளுக்கு ஒருங்கிணைப்புக் குழு நியமனம்!

### மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை, அக். 17 -

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் பருவ மழையை எதிர்கொள்ள 4 பகுதிகளுக்கு ஒருங்கிணைப்பு குழு நியமித்து நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் - தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர், கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தலின்படி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் ஆலோசனைப்படி நெல்லை மாநகரப் பகுதிகளில் பருவமழையினால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய மாநகர செயலாளர் சுப்பிரமணியன் தலைமையில் பகுதி வாரியாக ஒருங்கிணைப்பு குழு தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மாநகர தி.மு.க.

சார்பில் நியமிக்கப்படுகிறார்கள்.

அதன்படி தலைவராக நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி, மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி நெல்லை பேட்டை பகுதியும்,

தச்சை பகுதிக்கு தலைவராக பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன், மாநகர துணை செயலாளர் பிரபு ஆகியோரும்,

பாளை பகுதிக்கு தலைவராக பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை ஆகியோரும், மேலப்பாளையம் பகுதிக்கு தலைவராக பகுதி செயலாளர் துபாய் சாகுல், மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் ஆகியோரும்.

நெல்லை மாநகர பகுதிகளில் பருவமழையினால் ஏற்படும் மழைநீர் தேங்குதல், மரம் விழுதல், மின் வெட்டுகள் ஏற்படாமல் நெல்லை மாநகர தி.மு.க அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலக தொலைபேசி எண் 9894821913 மற்றும் வாட்சப் எண்

8754798163 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

கீழ்க்கண்ட பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மாமன்ற உறுப்பினர்கள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் அந்தந்த பகுதிகளில் வார்டு வாரியாக பருவ மழையை எதிர்கொண்டு பொது மக்களுக்கு உதவிடும் பணிகளில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஹைவேவிஸ் அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழங்கினார். உடன் கம்பம் ஒன்றிய செயலாளர் தங்கபாண்டியன், ஹைவேஸ் பேரூர் செயலாளர் கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## தர்மபுரி கிழக்கு மாவட்டம்

### பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டம்!

தர்மபுரி, அக். 17 -

முதலமைச்சர் . கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தருமபுரி கிழக்கு மாவட்டம், பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி அவர்களின் அறிமுக கூட்டம் அறிமுக கூட்டம் பென்னாகரம் சமுதாய கூடத்தில் தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழகப் பொருளாளர் தங்கமணி, துணைச் செயலாளர்கள் ரேணுகா தேவி, உமா சங்கர், பொதுக்குழு உறுப்பினர் சோலை மணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏரியூர் செல்வராஜ், மடம் முருகேசன், ஏ.கருணாநிதி, சபரிநாதன்,


பேரூர்க் கழகச் செயலாளர்கள் வீரமணி, சண்முகம் மற்றும் பென்னாகரம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர், BLA-2, BLC நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். இராகவானந்தம்

**அக்டோபர் 17 (1999)**



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**